


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலகிருஷ்ணன்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பத்திரகாளி அம்மன் கோவில் அருகில், 70-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் இன்று (15.08.2016) சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண் :533/2015 நாள்: 15.08.2016

**கன்னியாகுமரி மாவட்டம்**

**மேலகிருஷ்ணன்புதூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்பு.**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலகிருஷ்ணன்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பத்திரகாளி அம்மன் கோவில் அருகில், 70-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.08.2016) சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

இக்கிராமசபைக் கூட்டத்தில், ஜனவரி 2016 முதல் ஜூலை 2016 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்தும், கிராம ஊராட்சி வளர்ச்சித்திட்ட அறிக்கைகள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் குறித்தும், பிரதமமந்திரி குடியிருப்புத் திட்டம் குறித்தும், ஊராட்சிப்பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்தும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்திய திட்டங்கள் குறித்தும், புது வாழ்வுத்திட்டம் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், நியாயவிலைகடை சமூகத் தணிக்கை குறித்தும், கோமாரி நோய் தடுப்பு குறித்தும், அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் செயல்படுத்திய திட்டங்கள் குறித்தும், ஊராட்சி வரவு, செலவு கணக்குகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது

அதன் பின்னர் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

டெங்கு கொசு உருவாகாமல் இருக்க பொதுமக்கள் தங்களது வீடு மற்றும் வீட்டின் அருகில் உள்ள சுற்றுபுற பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தண்ணீரை ஒருபோதும் திறந்து வைக்காமல், மூடி வைத்திருக்க வேண்டும். மேலும் அரசால் வழங்கும் சுகாதார வழிமுறைகளை நிச்சயமாக நீங்கள் கடைபிடிக்க வேண்டும். நமது மாவட்டத்தில் 95 ஊராட்சிகளிலும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை உருவாக்கியுள்ளோம். இதனை கடைபிடிக்க ஊராட்சித்தலைவர்கள், ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். திறந்தவெளியில் மலம் கழித்தால் அதிலிருந்து 2 கோடி பாக்ட்டீரியா உருவாகுவதோடு, மனிதனின் ஆரோக்கியத்திற்கு கேடு விலக்கும். மேலும் மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகள், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவை அனைத்தையும் நீங்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எப்போதெல்லாம் கிராமசபைக் கூட்டம் நடைபெறுகிறதோ அப்போதெல்லாம் நீங்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, சுகாதாரதுறையின் மூலம், மருத்துவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டு, அங்கு 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பரிசோதனை இலவசமாக செய்யப்பட்டது. இதில் பரிசோதனை செய்த 52 நபர்களின், புதிதாக 9 நபர்களுக்கு இரத்த அழுத்த நோய் இருப்பதாக கண்டறியப்பட்டது. மேலும் சர்க்கரை நோயிக்கு இரத்த மாதிரி பரிசோதனை செய்யப்பட்டது. இதனையும், டெங்குகொசு விழிப்புணர்வு கண்காட்சியினையும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. கெட்சி லீமா அமாலினி, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திருமதி. சகாய ஜெயராணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், உதவி இயக்குநர் (கலால்) திரு. காளிமுத்து, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. ராணி, இணை இயக்குநர் (வேளாண்மைதுறை) திரு. இளங்கோ, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புதுறை) மரு. இராமநாதன், உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்புதுறை) மரு. ஜெயபால், தமிழ்நாடு குடிநீர் வாரிய நிர்வாக பொறியாளர் திரு. ஒய். அருள்தாஸ், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி. மூர்த்தி, மகளிர் திட்டம் (உதவித்திட்ட அலுவலர்) திரு. ஆன்றனி சிலுவை, துணை வட்டாட்சியர் திரு. கண்ணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மேலகிருஷ்ணன் புதூர் ஊராட்சித்தலைவர் (பொறுப்பு) திரு. பி.ராஜன், வார்டு உறுப்பினர்கள் திரு. பகவதி, திரு. ராஜப்பன், திரு. சிவக்குமார், திரு. ராஜாசிங், திருமதி. பத்மாவதி மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.